| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>சிவக்குமார் | அ.வ.எண். 289/2011 | 15.02.2024 |

4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) எனது தகப்பனார் சாம்பசிவத்தின் தந்தைபெயர் சிங்காரம் என்றால் சரிதான். மேற்படி சிங்காரத்தின் மனைவி பெயர் குழந்தைஅம்மாள் என்று சொல்வார்கள் ஆனால் அவரது பெயர் குழந்தைவேலுஅம்மாள் ஆகும். மேற்படி குழந்தைஅம்மாளின் சகோதரிகள் அனந்தாயி மற்றும் அகிலாண்டம் என்றால் அனந்தாயி மட்டும் தான் சகோதரி. அகிலாண்டம், அனந்தாயி, குழந்தைஅம்மாள் ஆகியோரின் பெற்றோர் பெயர் பழனியாண்டி–சிவகாமி அம்மாள் என்றால் சரிதான். ஆனால் அகிலாண்டத்தை தவிர மற்ற இரண்டு பேர் மட்டும் தான் வாரிசுகள். அகிலாண்டம் என்பவரின் கணவர் பெயர் மாரிபண்டாரமா என்றால் அகிலாண்டம் யார் என்று எனக்கு தெரியாது. அனந்தாயின் கணவர் பெயர் பழனிவேல் பண்டாரம் என்றால் சரிதான். மேற்படி பழனிவேல் அனந்தாயியை விட்டு பிரிந்து சென்று இறந்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அனந்தாயிக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். அகிலாண்டம்–மாரிப்பண்டாரம் ஆகியோரின் வாரிசு முத்துசாமி பண்டாரம் என்றால் அகிலாண்டம் யார் என்று எனக்கு தெரியாது. அப்படி ஒரு ஆளே இல்லை. வழக்கு தாக்கல் செய்துள்ள மாரிமுத்து வகையறா முத்துசாமியின் வாரிசுகள் என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. குழந்தையம்மாள்–சிங்காரம் இருவரும் புதுக்கோட்டை மாவட்டம் கோட்டுக்காரன்பட்டியில் வசித்தார்களா என்றால் சரிதான். குழந்தையம்மாள்–சிங்காரம் ஆகியோரின் மூத்த மகன் பெயர் சாம்பசிவம், இளைய மகன் பெயர் நாகராசு என்றால் அவர்களுக்கு ஒரே மகன் எனது தகப்பனார் சாம்பசிவம் மட்டும் தான் நாகராசு யார் என்றே எனக்கு

தெரியாது. சாம்பசிவத்தின் முதல் மனைவி மீனாம்பாள் என்றால் சரிதான். மேற்படி மீனாம்பாளுக்கு அன்புமணி, கிருஷ்ணவேணி மற்றும் மகாலெட்சுமி என்ற மூன்று மகள்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். கிருஷ்ணவேணி திருமணமாகாமல் இறந்து விட்டார் என்றால் சரிதான். மீனாம்பாளும் இறந்து விட்டார் என்றால் சரிதான்.

2) அனந்தாயி அம்மாளுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் சாம்பசிவம் அனந்தாயி அம்மாளுடன் இருந்து வசித்து வந்தாரா என்றால் இல்லை. சாம்பசிவம் குழந்தையாக இருக்கும்போதே அனந்தாயி அம்மாள் அழைத்து வந்துவிட்டார். சாம்பசிவம் சரஸ்வதி என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். சிவக்குமார் ஆகிய நான் மற்றும் எனது சகோதரி ஜானகி மட்டுமே சரஸ்வதியின் வாரிசுகள். எனது தந்தையின் பூர்வீக சொத்து புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி பூர்வீக சொத்தை 08.10.2020ம் தேதி வழக்கின் 4 ம் பிரதிவாதியான நாகராஜ் என்பவரின் மகன் மற்றும் வேறு ஒரு நாகராஜ் என்பவருக்கு விற்பனை செய்தோமா என்றால் விற்பனை செய்தோம் ஆனால் நாகராஜ்க்கு விற்பனை செய்தோமா என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் கிரையம் செய்து கொடுத்த ஆவணம் என்றால் நான் கிரையம் செய்து கொடுத்த ஆவணம் தான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.24 ஆகும்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 26.02.2024 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.